செ.வெ.எண். 41

நாள். 16.05.2017

# பத்திரிக்கை செய்தி

**தேர்வுமுடிவுகளின் மனக்குழப்பத்தில் இருந்து விடுபட மாணவ – மாணவிகளுக்கான அரசு மருத்துவ ஆலோசனை சேவைமையம் இலவச தொலைபேசி எண்: 104 குறித்த விழிப்புணர்வு.**

பிளஸ்2 மற்றும் 10ம் வகுப்பு மாணவ – மாணவிகள் தேர்வு முடிவுகள் தொடர்பாக மன அழுத்தத்தில் இருந்து விடுபட அரசு மருத்துவ ஆலோசனை சேவை மையத்தை அணுகலாம் என திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு.

12ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளிவந்த நிலையில், 10ம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளிவர இருப்பதால் தேர்வு எழுதிய பெரும்பாலான மாணவ – மாணவிகள் மதிப்பெண் குறைவு, தேர்ச்சி பெறாமல் போதல் போன்ற காரணங்களால் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகி பல மாணவ, மாணவிகள் விபரீத முடிவுகளை எடுப்பதால், இதனை தடுக்கும் விதமாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கல்வி மற்றும் மனநல ஆலோசகர்களைக் கொண்டு 24 மணி நேரமும் அரசு மருத்துவ ஆலோசனை சேவை மையம், இலவச தொலைபேசி எண்: 104 செயல்பட்டு வருகிறது.

ஆகையால், மாவட்டத்திலுள்ள குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள், குழந்தைகள் இல்லக்காப்பாளர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் பணி செய்யும் அனைவரும் இந்த அரசு மருத்துவ ஆலோசனை சேவை மையம் இலவச தொலைபேசி எண்:104 செயல்பாடுகளை மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், சென்னை, சிநேகா தற்கொலை எண்ணத்திலிருந்து விடுபட ஆலோசனை வழங்கும் மையத்தின் இலவச தொடர்பு எண்ணை (044-24640050) தொடர்பு கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இவ்விழிப்புணர்வு குறித்த் விவரங்களுக்கு மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலுவலர், (8754427544) அல்லது மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலகினை(0462-2352953) தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒப்பம்

முனைவர். மு.கருணாகரன் இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி.

// உண்மை நகல் - உத்தரவுப்படி //

16/5/17

மாவட்டக் குழந்தைப் பாதுகாப்பு அலுவலர்,
திருநெல்வேலி-5.